தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

இன்று ஆண்டிப்பட்டி, திண்டுக்கல்லில் உரையாற்றுகிறார் !

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஆறாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 17-ஆம் தேதி ஆண்டிப்பட்டியில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறாம் கட்டமாக ஆண்டிப்பட்டியில் பரப்புரையை தொடங்குகிறார்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள்
17.04.2026 (வெள்ளிக் கிழமை)		
மாலை 5 மணி	ஆண்டிப்பட்டி - (பொதுக்கூட்டம்)	ஆண்டிப்பட்டி, பெரியகுளம், போடிநாயக்கனூர், கம்பம்,
மாலை 7 மணி	திண்டுக்கல் - மணிக்கூண்டு (பொதுக்கூட்டம்)	திண்டுக்கல், பழனி, ஆத்தூர், நிலக்கோட்டை, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், நத்தம்
18.04.2026 (சனிக் கிழமை)		
மாலை 5 மணி	திருப்பூர் (பொதுக்கூட்டம்)	திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, பல்லடம், அவினாசி, தாராபுரம், காங்கேயம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம்
மாலை 7 மணி	மேட்டுப்பாளையம் (பொதுக்கூட்டம்)	மேட்டுப்பாளையம், உதகமண்டலம், கூடலூர், குன்னூர், கவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர்
19.04.2026 (ஞாயிற்றுக் கிழமை)		
மாலை 4 மணி	ஓசூர் (பொதுக்கூட்டம்)	ஓசூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர், வேப்பனஹள்ளி, தளி

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 14.04.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.

தருமபுரி மாவட்டத்தில், சட்டமன்றத் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திற்கு வருகைபுரிந்த கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.4.2026) காலை பாலக்கோடில் நடைபயிற்சி மேற்கொண்டபோது, கழக வேட்பாளர் டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் அவர்களுக்கு வாக்கு சேகரித்தார். உடன், தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் பழனியப்பன் ஆகியோர் உள்ளனர்.